ஆகவே விளையாட்டு அரங்கம் தேவை; ஆனால் அவற்றை உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு அந்தந்தப் பகுதிகளில் விளையாட்டு ஆர்வம் தூண்டப்பட வேண்டும். இப்போது அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே விளையாட்டு அரங்கம் கட்டுவது என்பது அரசு ஒத்துக் கொண்ட ஒரு கொள்கை தான். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கேற்ப நாம் அவற்றைக் கட்டி வருகிறோம்.

டாக்டர் .கே. சமரசம்: தலைவர் அவர்களே, தர்மபுரியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த ஸ்டேடியம் கட்டுவது என்பது முடிக்கப்பட்டு அதிலே மாநில அளவுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்திருக்கின்றன. அதற்காக அந்த மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தர்மபுரி ஸ்டேடியம் கட்டுவதற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது? என்னென்ன விளையாட்டுக்களை அங்கே விளையாடுவதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன? நீச்சல் குளம் அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தச் செயல் முறைத் திட்டம் உருவாக்கப்பட்டு விட்டதா? அது தயாரிக்கப்பட்டு அவ்வாறு கட்டுகிறார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தர்மபுரி விளையாட்டரங்கம் கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்ற விவரம் தான் தரப்பட்டிருக்கின்றது. ஆகவே நீச்சல் குளத்தைப் பற்றிய விவரம் இங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளையான்குடி யூனியனில் 1982-83-ஆம் ஆண்டுக்கான N.R.E.P. திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை.

249—(*வினா எண் 17379)—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி யூனியனில் 1982-83 ஆம் ஆண்டுக்கு NREP திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதிகத் தொகை ஒதுக்க அரசு முன்வருமா?

1984 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, (அ) ரூ. 5,55,520 தொகையாகவும் 40 மெ. டன்கள் அரிசியாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அளவிலான மக்கள் குழுவின் மூலமாக தேவையான நிதி ஒதுக்கப்படும்.

சமூக கிணறுகள் வெட்டும் திட்டம்.

250—(*வினா எண் 17862)-திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :- மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் கிணறுகள் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எங்காவது அவ்வேலை ஆரம்பிக்கப் பட்டுள்ளதா?

(இ) அதற்கு மத்திய அரசின் பங்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம், நடைமுறையில் உள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் தவிர மற்றும் எல்லா மாவட்டங்களிலும் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நிதி நிலை குறைவாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு சமுதாயக் கிணறுகள் அமைக்க முன்பணம் கொடுக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் பத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தலா ரூ. 40,000 வீதம் முன்பணம் அனுமதித்து சில வேலைகள் முடிந்தும், சில வேலைகள் முடியாமலும் இருக்கின்றன.

(இ) இதற்கு மத்திய அரசின் பங்கு எதுவும் இல்லை.

(முற்பகல் 9-20)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியைத் தவிர பாக்கி உள்ள அத்தனை மாவட்டங்களிலும் இந்தக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சமுதாயக் கிணறுகளுக்கு நாம் எவ்வளவு அதிகமாகப் பணம் போட முடியுமோ அந்த அளவு போட்டு, பெரிய கிணறுகளை வெட்டி, பம்ப் செட் பொருத்தி ஏதாவது 20 ஏக்கர், 30 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியுமா? அப்படியென்றால் அதன் விவரம் என்ன?